# கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்

## COS.No. 58 of 2024

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | PW1– Mr.Paramasivam | கிராமம்: | |
| த.பெ. | Mr.Venkatasamy | வேலை: | |
| வயது | 55 | செல்போன் எண் | |

<u>முதல் விசாரணை:</u>

என் பெயர் பரமசிவம், வயது 55, த/பெ.வெங்கடசாமி. நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 20.09.2017– GST Certificate of the plaintiff's business – Photocopy

2) 01.07.2010– Certificate of Importer–Exporter Code of the Plaintiff – Photocopy

3) GST online copy of the 1st defendant – Photocopy

4) Invoices and E–way Bills (Series) – Photocopy

5) Statement of Accounts of the Plaintiff – Photocopy

6) 09.08.2024– Non–starter report – Original

7) Ledger Account of Plaintiff from 01.04.2019 to 09.12.2024 – Original

8) 27.06.2017– Mortgage Deed executed by Plaintiff's proprietor in favour of the 2nd defendant under defendant under Doc.No.3324/2017–Ganapathy SRO – Certified copy

மேற்கண்ட நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணங்களில் 1 முதல் 4, 7, 8 வரையுள்ள ஆவணங்கள் முறையே <u>வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 ஆக</u> பின்வரும் குறிப்புகளுடன் குறியீடு செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.1 பாரதிய சாட்சிய அதிநயம் சட்டப்பிரிவு 63ன் கீழான சான்று சமர்ப்பணம் செய்வதற்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.2 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.3 பாரதிய சாட்சிய அதிநயம் சட்டப்பிரிவு 63ன் கீழான சான்று சமர்ப்பணம் செய்வதற்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.4, 22 இன்வாய்ஸ்கள், proforma invoice பாரதிய சாட்சிய அதிநயம் சட்டப்பிரிவு 60ன் கீழான மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.7, 8 ஆகியவை அசல் மற்றும் சான்றிட்ட ஆவணங்களாக இருந்ததால் தாக்கல் செய்யப்பட்டவாறு குறியீடு செய்ய ஏற்கப்பட்டன. மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 அனைத்தும் பிரதிவாதி தரப்பில் ஆவண ஏற்பு மற்றும் மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டிருப்பின் அதில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகளுக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. வாதி தரப்பில் உரிமையியல் கட்டளை 16 விதி எண்.6–ன் கீழாக தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி/வங்கி அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட 01.04.2019 முதல் 31.03.2020

வரையுள்ள வங்கி கணக்கு அறிக்கையும், 01.04.2020 முதல் 13.11.2020 வரையுள்ள வங்கி கணக்கு அறிக்கை ஆகியவை முறையே Ex.X.1 வரிசையாக குறியீடு செய்யப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

2–ம் பிரதிவாதியை எனக்கு கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து பழக்கம். 2–ம் பிரதிவாதி அரசு பணியில் இருந்தது எனக்கு தெரியாது.

1–ம் பிரதிவாதி நிறுவனத்தை துவங்குவதற்கு முன்னால் இரண்டாம் பிரதிவாதிக்கு ஏற்கனவே Yarn mill நடத்தி அனுபவம் இல்லை என்று சொன்னால் தெரியாது.

நான் இரண்டு நிறுவனங்கள் நடத்தி வருகிறேன். ஒன்று பத்மஸ்ரீ என்ஜினியரிங், மற்றொன்று ஸ்ரீ செந்தூர் முருகன் மில்ஸ் ஆகிய நிறுவனங்களாகும்.

பத்மஸ்ரீ இன்ஜினியரிங் நிறுவனம் வாயிலாகதான் வெளிநாடுகளில் இருந்து எந்திரங்களை இறக்குமதி செய்யும் தொழிலை செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான்.

எந்திரங்கள் இறக்குமதி, ஏற்றுமதி தொழிலை எத்தனை ஆண்டுகளாக செய்கிறீர்கள் என்று சொன்னால் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் செய்து வருகிறேன்.

செந்தூர் முருகன் மில்ஸ் என்ற நிறுவனம் ஒரு yarn mill என்றால் சரிதான்.

செந்தூர் முருகன் மில்ஸ் நிறுவனம் தற்போதும் செயல்படுகிறதா என்றால் இல்லை, நிறுத்தி விட்டேன்.

எத்தனை எந்திரங்கள் பிரதிவாதிகளுக்கு நீங்கள் வழங்கியுள்ளீர்கள் என்றால் பல்வேறு எந்திரங்கள் மூன்று lot களாக கொடுக்கப்பட்டது.

சாட்சியிடம் ஆவண எண்.4 உடன் இணைத்துத் தாக்கல் செய்யப்பட்ட 21.09.2019 தேதியிட்ட proforma invoice (quotation) காண்பிக்கப்பட்டு இந்த அடிப்படையில் தான் நீங்கள் பிரதிவாதிகளுக்கு பொருட்கள் வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தீர்கள் எனக் கேட்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தை பார்த்தார், பார்த்துவிட்டு சரி என ஆமோதித்தார்.

நீங்கள் இந்த ஆவணத்தில் ஒன்பது பட்டியல் கொண்ட எந்திரங்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளீர்கள், இவற்றில் எவை எவை எந்திரங்கள், எவை எவை உதிரி பாகங்கள் என்றால் ஒன்று முதல் ஆறு வரை பட்டியலில் குறிப்பிட்டுள்ளவை எந்திரங்கள், ஏழு முதல் ஒன்பது வரையில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உதிரி பாகங்கள் ஆகும்.

Proforma invoice ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஒன்பது பட்டியல் கொண்ட அனைத்து எந்திரங்களையும் பிரதிவாதிகளுக்கு வழங்கி விட்டீர்களா என்றால் பட்டியலில் எட்டு, ஒன்பது என்று குறிப்பிட்டுள்ள எந்திரங்கள்/உதிரி பாகங்களை வழங்கவில்லை.

Proforma invoice ஆவணத்தில் 1 வது எந்திரம் with complete accessories என்று குறிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

Proforma invoice ஆவணத்தில் 2 முதல் 5 வது எந்திரங்களிலும் with complete accessories என்று குறிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

Proforma invoice ஆவணத்தில் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆறாவது எந்திரத்திற்கும் with accessories நீங்கள் வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை, ஆனால் நான் உதிரி பாகங்கள் கொடுத்துள்ளேன்.

ஆறாவது எந்திரத்திற்கான உதிரி பாகங்களை எந்த தேதியில் பிரதிவாதிகளுக்கு வழங்கினீர்கள் என்றால் எந்திரங்கள் supply செய்த இரண்டு மாத காலத்தில் வந்து வாங்கிச்சென்று விட்டார்கள்.

ஆறாவது எந்திரத்தின் உதிரி பாகத்தின் பெயர் என்ன என்றால் over head cleaner.

17.04.2021 தேதியிட்ட இன்வாய்ஸில் குறிப்பிட்டுள்ள ஆறாவது எந்திரத்திற்குரிய over head cleaner என்று சொன்னால் ஆரம்பத்தில் ஒரு over head cleaner பிரதிவாதிக்கு அனுப்பி வைத்து விட்டோம், பின்னர் அது சரியாக வேலை செய்யவில்லை என்று கூறியதால் 17.04.2021 தேதியில் மீண்டும் ஒரு over head cleaner புதிதாக வாங்கி கொடுக்கப்பட்டது.

Proforma invoice ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 9 பட்டியல் கொண்ட எந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களுக்கு தனித்தனியே விலை நிர்ணயம் செய்து குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், ஐந்தாவது பட்டியல் எந்திரத்திற்கு இரண்டு எந்திரங்களுக்கும் சேர்த்தான விலையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Proforma invoice ல் குறிப்பிட்டுள்ள ஆறு எந்திரங்களுக்கான விலை Proforma invoice இல் குறிப்பிட்டுவிட்டு மீண்டும் அதே ஆறு எந்திரங்களுக்குரிய 21 tax இன்வாய்ஸுகள் எந்த அடிப்படையில் வழங்கியுள்ளீர்கள் என்று சொன்னால் Proforma invoice இல் குறிப்பிட்டுள்ள ஆறு எந்திரங்களுக்குரிய விலைகள் தான் 21 tax invoice களிலும் பிரித்துப் பிரித்து அந்த பொருட்களை பிரதிவாதியின் இடத்திற்கு வாகனங்களில் எடுத்துச் செல்லுமாறு இன்வாய்ஸ்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அதன் விலை Proforma invoice இல் குறிப்பிடப்பட்டுள்ள விலை தான்.

நீங்கள் பிரித்துப் பிரித்து விலை காண்பிக்கப்பட்டதில் Proforma invoice இல் குறிப்பிட்டுள்ள விலையை விட ரூபாய் 4 லட்சம் கூடுதலாக 21 invoice களில் காண்பித்து தொகையும் வசூல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Proforma invoice மற்றும் Tax invoice பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும்.

Proforma invoice என்பது எந்திரத்திற்கான விலையை குறிப்பிடும் ஒரு விலைப்பட்டியல் கொண்ட ஆவணம் என்றால் சரிதான்.

Tax invoice என்பது பொதுவாக விற்பனை செய்யும் பொருளுக்குரிய விலை மற்றும் அதற்கான வரிகள் இணைத்த ஆவணம் என்றால் சரிதான்.

Ex.A.4 22 tax invoice ஆவணங்கள் பணம் செலுத்திய பிறகு வழங்கப்பட்ட ஆவணங்கள் என்றால் இல்லை.

Ex.A.4 22 tax invoice ஆவணங்கள் எந்த அடிப்படையில் கொடுத்தீர்கள் என்று சொன்னால் Proforma invoice பிரதிவாதியின் வங்கிக்கு வழங்கினோம், அவர்களும் வங்கிக்கடன் sanction ஆகிவிட்டது என்றும், வங்கியில் இருந்து தான் எங்களுக்கான தொகை வழங்கப்பட்டு வந்தது, அதன் அடிப்படையில் தான் நாங்கள் எந்திரங்களும் வழங்கி வந்தோம், இது தவிர முன்பணமாக இரண்டாம் பிரதிவாதி ரூ.76 லட்சம் வழங்கியிருந்தார்.

பிரதிவாதிகளுக்கு வழங்கி வந்த எந்திரங்கள் எந்த நாட்டில் இருந்து உங்களால் இறக்குமதி செய்து வழங்கப்பட்டு வந்தது என்றால் ஒரு பகுதி சீனாவில் இருந்தும், ஒரு பகுதி ஜெர்மனியில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டது.

ஜெர்மனி மற்றும் சீன தேசத்திலிருந்து உங்களால் இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்கள் சீனா மற்றும் ஜெர்மனி தேசத்தில் அந்த எந்திரங்கள் விதிகளின்படி செயல்படாமல் இருந்தால் மட்டுமே அவர்களால் அதை ஏற்றுமதி செய்ய முடியும் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிக்கு வழங்கிய எந்திரங்கள் சீனா மற்றும் ஜெர்மனி நாட்டில் இருந்து எந்த ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டது என்றால் 2018 – 2019 ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்டது.

அவ்வாறு 2018 – 2019 ஆம் ஆண்டுகளில் தான் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட எந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டது என்று காண்பிப்பதற்கான ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் ஆவணங்கள் இருக்கிறது.

பிரதிவாதிகளுக்கு வழங்கிய எந்திரங்கள் உங்களுடைய மில்லில் ஓடிக்கொண்டிருந்த எந்திரங்களை கழட்டிக் கொடுத்தீர்களா என்றால் சரிதான், பொதுவாக வெளிநாட்டிலிருந்து எந்திரங்கள் இறக்குமதி செய்யப்படும்போது அவை உதிரி பாகங்களாக தான் இறக்குமதி செய்யப்படும், இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்கள் எங்களுடைய மில்லில் வைத்து assemble செய்து அவை சரியாக ஓடுகிறதா என்று சரி பார்த்து, சரிபார்க்கப்பட்ட பின்னர் முழுமையாக அந்த எந்திரம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டது.

நீங்கள் பிரதிவாதிகளுக்கு புதிதாக வாங்கிய எந்திரத்தை கொடுக்கவில்லை, உங்கள் மில்லில் ஓடிக் கொண்டிருந்த எந்திரத்தை புதிதாக வாங்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்கள் என்று தெரிவித்து பொய்யாகக் கூறி உங்கள் மில்லில் ஓடிக்கொண்டிருந்த

எந்திரத்தைக் கழட்டிக் கொடுத்து விட்டீர்கள் என்று சொன்னால் அது தவறு.

எந்திரங்கள் வாங்குவதற்காக முன்பண தொகையாக பிரதிவாதிகள் உங்களுக்கு எவ்வளவு தொகை எந்த தேதியில் கொடுத்தார்கள் என்றால் 2019 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு தேதிகளில் 76 லட்சம் ரூபாய் தொகையினை கொடுத்தார்கள்.

மொத்தம் பிரதிவாதிகள் 86 லட்ச ரூபாய் உங்களுக்கு வழங்கியுள்ளார்கள், நீங்கள் வழக்கிற்காக ரூ.76 லட்சம் என்று குறைத்துக் கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல, ரூ.76 லட்சம் தான் கொடுத்தார்கள்.

வங்கியில் பயன்படுத்தப்பட்ட எந்திரத்திற்கு proforma invoice இல் குறிப்பிட்டுள்ள எந்திரத்தின் விலையில் 50 சதவீதம் வரையில்தான் loan ஆக வழங்க முடியும் என்று கூறிவிட்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதி வங்கியில் கடன் வாங்கி ரூபாய் ஒரு கோடியே 94 லட்சம் உங்களுக்கு வங்கிக் கணக்கு மூலமாக வங்கியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை.

வங்கி செலுத்தியதன் வாயிலாகவும், முன்பணமாக பிரதிவாதிகள் வழங்கிய தொகையும் சேர்த்து மொத்தமாக உங்களுக்கு எவ்வளவு தொகை இதுவரை வரப் பெற்றுள்ளது என்று சொன்னால் 2 கோடியே ஒரு லட்சம் ரூபாய் வரப்பட்டுள்ளது.

எங்கள் இரு நிறுவனத்தின் auditor திரு.முருகானந்தம்.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.2 ஆவணத்தை சாட்சியிடம் காட்டி அதில்

குறிப்பிடப்பட்டிருக்கும் திரு.முருகானந்தம் தான் உங்களுடைய ஆடிட்டர் என கேட்கப்பட்டது, சாட்சி அதை பார்த்துவிட்டு சரி என ஆமோதித்தார்.

சாட்சியிடம் ஒரு கடிதம் காண்பிக்கப்பட்டு இந்தக் கடிதம் உங்கள் ஆடிட்டர் திரு.முருகானந்தம் அவர்களால் தான் வழங்கப்பட்டுள்ளது என கேட்கப்பட்டது, சாட்சி அந்தக் கடிதத்தை தனது ஆடிட்டர் திரு.முருகானந்தம் வழங்கியதாக தெரிவித்தார், அந்த ஆவணம் தங்கள் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பில் கேட்கப்பட்டது, அந்த ஆவணம் <u>பி.வா.சா.ஆ.1 ஆக</u> குறியீடு செய்யப்பட்டது, சாட்சி அந்த ஆவணம் தங்கள் தரப்பு ஆடிட்டர் திரு.முருகானந்தத்தால் கொடுக்கப்பட்டது தனக்குத் தெரியாது என தெரிவித்தார்.

இந்தக் கடிதத்தில் உங்களது ஆடிட்டர் திரு.முருகானந்தம் ரூபாய் 76 லட்சம் மற்றும் ரூபாய் 10 லட்சம் என்று குறிப்பிட்டு மொத்தம் ரூபாய் 86 லட்சம் உங்களுக்கு முன்பணமாகக் கொடுக்கப்பட்டதாக இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அவர் கூறியிருப்பது தவறு.

உங்களது ஆடிட்டர் திரு.முருகானந்தம் எந்தெந்த தேதிகளில் வங்கிக் கணக்கில் ரூபாய் 86 லட்சம் செலுத்தப்பட்டுள்ளது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுக் கணக்கு கொடுத்துள்ளார், தற்போது நீங்கள் ரூபாய் 10 லட்சம் கூடுதலாக கொடுக்கப்பட்டதை மறைத்து இந்தக் கடிதத்தை மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூபாய் 86 லட்சமும் வங்கி மூலமாக தான் உங்களது கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் ரூபாய் 76 லட்சம் வங்கி மூலமாக வந்தது.

ரூபாய் 86 லட்சம் ரூபாய் தொகை பிரதிவாதியால் உங்களுக்கு முன்பனத்தொகையாக கொடுக்கப்பட்டுள்ளது, நீங்கள் தவறாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

22 Tax invoice களிலும் terms of delivery என்று குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏதேனும் குறிப்புகள் இடம் பெற்றுள்ளதா என்றால் இல்லை.

Terms of delivery என்று 22 Tax invoice களில் என்ன காரணத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

உங்களுக்கு என்ன காரணத்திற்காக Terms of delivery என்று 22 Tax invoice களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற காரணம் தெரியும், தெரியாது என்று வழக்கிற்காக மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Terms of delivery என்று 22 Tax invoice களில் ஏதேனும் credit இருந்தால் அதை அந்த இடத்தில் குறிப்பிடுவார்கள், அவ்வாறு குறிப்பிடுவது பற்றி உங்களுக்குத் தெரியும், தெரிந்திருந்தும் வழக்கிற்காக தெரியாது என மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Authorised signatory என்று 22 Tax invoice களில் இடம்பெற்றுள்ள கையெழுத்தானது யாருடையது என்றால் எனது மச்சினனான திரு.கோவிந்தராஜ் என்பவருடைய கையெழுத்து.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இருந்த நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண்.3 ஆக வாதி தரப்பால் வழங்கப்பட்ட tax invoice என்று குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் இடம்பெற்றுள்ள கையெழுத்துக்கள் யாருடையது என சாட்சியிடம் காண்பித்துக் கேட்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணங்களைப் பார்த்தார், அதில் இடம்பெற்றிருந்த கையெழுத்துகளையும் பார்த்தார், பார்த்துவிட்டு அதில்

இடம்பெற்றுள்ள கையெழுத்து யாருடையது என்று தனக்குத் தெரியவில்லை என்று தெரிவித்தார்.

உங்கள் மைத்துனர் திரு.கோவிந்தராஜ் அவர்கள் உங்கள் நிறுவனத்தில் என்ன நிலையில் பணியில் இருக்கிறார் என்றால் மேலாளராக இருக்கிறார்.

நீங்கள் கொடுத்துள்ள proforma இன்வாய்ஸில் இடம் பெற்றுள்ள 7, 8, 9 எந்திரங்களை நீங்கள் பிரதிவாதிகளுக்கு வழங்கவில்லை என்று சொன்னால் சரிதான், வழங்கவில்லை.

17.04.2021 tax invoice தவிர மற்ற 21 Tax invoice களில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் பிரதிவாதிகளுக்கு எந்திரங்களை நீங்கள் வழங்கி விட்டீர்களா என்றால் சரிதான், வழங்கிவிட்டேன்.

17.04.2021 tax invoice தேதியில் தனியாக ஒரு tax invoice தேதி குறிப்பிட்டு GST தொகையுடன் போடப்பட்டுள்ளது என்று சாட்சியிடம் காண்பித்துக் கேட்கப்பட்டது, சாட்சி சரி என ஆமோதித்தார்.

17.04.2021 தேதியிட்ட tax invoice தவிர மற்ற 21 Tax invoice கள் தனியாக போடப்பட்டது என்றால் சரிதான்.

17.04.2021 தேதியிட்ட tax invoice க்கானா எந்திரத்தை பிரதிவாதி தனியாக பணம் செலுத்தி, தனியாக வாங்கினார் என்றால் சரியல்ல.

17.04.2021 தேதியிட்ட tax invoice தனியாக தான் போடப்பட்டது, அவ்வாறு அந்த tax invoice போடப்பட்டதற்கு இவ்வழக்கில் வழக்கு காலதாமதத்தை மறைப்பதற்காக போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதியின் வங்கி மூலமாக உங்களுக்கு எவ்வளவு தொகை உங்களது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் ரூபாய் ஒரு கோடியே 25 லட்சம் அனுப்பி வைக்கப்பட்டது.

மொத்தமாக இரண்டு நிறுவனங்களுக்கு ரூபாய் 1,29,44,107/– தொகை பத்மஸ்ரீ இன்ஜினியரிங் நிறுவனம் மற்றும் நீங்கள் வழங்கிய மற்றொரு வங்கி கணக்கு எண்ணிற்கும் பிரதிவாதியின் வங்கி மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, ரூபாய் ஒரு கோடியே 25 லட்சம் தான் அனுப்பி வைக்கப்பட்டது.

நீங்கள் பிரதிவாதிகளுக்கு வழங்கிய எந்திரங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட எந்திரங்கள் ஆனதால்தான் அதற்கு 50 சதவீத அளவிற்கு வங்கியானது (proforma invoice தொகையில்) loan கொடுக்க முன் வந்தது என்றால் வங்கி எவ்வளவு sanction செய்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது, proforma invoice ல் கொடுத்துள்ள தொகை தான் நான் அவரிடம் கோரியுள்ளேன்.

ஐந்து எந்திரங்களுக்கு நீங்கள் proforma invoice ல் குறிப்பிட்டுள்ள தொகையும், அதன் 50 சதவீத தொகையும் வங்கி மூலமாக உங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது, அவை உங்களுடைய proforma invoice உடன் ஒத்துப் போகிறது என்று சொன்னால் இல்லை.

Proforma invoice ல் குறிப்பிட்டுள்ள 50 சதவீத தொகையை வங்கி மூலமாகவும், பகுதி தொகையை முன்பணமாக பிரதிவாதியிடமிருந்தும், இது தவிர மீதி தொகையை முழுமையாக GST சேர்த்து தொகையாக பிரதிவாதியிடமிருந்து பெற்றுக் கொண்டு விட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

2 கோடியே ஒரு லட்சம் ரூபாய் வங்கி மூலமாக உங்களுக்குக் கிடைக்கப்பட்டுள்ள நிலையில் நீங்கள் எந்த அடிப்படையில் ரூ.3,16,77,099/- proforma invoice வழங்கினீர்கள் என்று சொன்னால் வங்கியில் இருந்து எந்திரங்கள் உங்களால் முழுமையாக வழங்கப்பட்டு எந்திரங்கள் completion certificate கிடைத்த பிறகு பாக்கி தொகையை தருவதாகக் கூறினார்கள், அந்த அடிப்படையில் எந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

நீங்கள் கூறுவது தவறு, அவ்வாறு பிரதிவாதிகளால் உங்களிடத்தில் தெரிவிக்கப்படவில்லை, நீங்கள் பொய்யாக வழக்கிற்காக வங்கி பாக்கி தொகையை தருவதாக கூறியதாக தற்போது கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கு தவிர பிரதிவாதிக்கும் உங்களுக்கும் வேறு வழக்குகள் இருக்கிறது என்று சொன்னால் என் பெயரில் இல்லை, எங்கள் மில் பெயரில் அவர் மற்றொரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பிரதிவாதியின் மனைவி பெயரில் மற்றொரு வழக்கு நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

உண்மையில் பிரதிவாதி உங்களுக்கு தொகை பாக்கி தர வேண்டியிருந்திருந்தால் நீங்கள் உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பீர்கள், இல்லாத காரணத்தினால் 17.04.2021 தேதியிட்ட ஒரு இன்வாய்ஸ் புதிதாக தயாரித்து காலாவதியான தொகைக்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் பலமுறை சென்று தொகை கேட்டோம், அவர்கள் மில் சரியாக இயங்கவில்லை என்றும், கொரோனா காலம் என்றும் கூறி காலம் தாழ்த்தி வந்தார்கள்,

அதன் பின்னிட்டு தொகை தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டவுடன் எங்கள் மீது போலியாக மற்றொரு வழக்கை தாக்கல் செய்து விட்டார்கள்.

பிரதிவாதிக்கு நீங்கள் வங்கி மூலமாக ரூபாய் 98 லட்சம் திருப்பிக் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் திருப்பிக் கொடுத்துள்ளேன் என்று கூறிவிட்டு சாட்சி என்னவென்று தனக்குத் தெரியவில்லை என்று தெரிவித்தார்.

நீங்கள் பிரதிவாதிகள் உங்களுக்கு எந்திரங்களுக்காக தொகை செலுத்த வேண்டிய பாக்கியிருக்கும் நிலையில் என்ன காரணத்திற்காக 95 லட்சம் ரூபாய் தொகையினை பிரதிவாதிகளுக்கு நீங்கள் திருப்பி செலுத்தினீர்கள் என்று சொன்னால் வியாபாரத்திற்காக பிரதிவாதியிடம் சொத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்கியிருந்தோம், அந்தக் கடனுக்கான தொகைக்காக கொஞ்சம் கொஞ்சமாக interest ற்காக பணம் செலுத்தப்பட்டது.

பிரதிவாதிகளிடமிருந்து தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனுக்காக ரூபாய் 95 லட்சம் வட்டியாக திருப்பி செலுத்தியுள்ளதாக நீங்கள் குறிப்பிட்டிருப்பது இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

ரூ.4,72,55,200/– பிரதிவாதி உங்களுக்கு இதுவரை செலுத்தியுள்ளார், அதில் எந்திரங்கள் supply செய்த வகையில் ரூ.3,17,30,200/– தொகை போக மீதி ரூ.1,55,25,000/– பாக்கி இருந்தது, அதில் ரூ.95,00,000/– நீங்கள் திருப்பி செலுத்தி விட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் திருப்பிக் கொடுக்கவில்லை.

உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

**உணவு இடைவேளைக்குப்பின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

ரூ.3,90,000/-க்கு தனியாக பிரதிவாதிகளுக்கு எந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

நீங்கள் வழங்கிவிட்டு தற்போது வழக்கிற்காக வழங்கவில்லை என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் பிரதிவாதிக்கு இன்னும் ரூ.56,35,000/- திரும்ப செலுத்த வேண்டிய பாக்கியுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

Proforma invoice இல் இடம் பெற்றுள்ள ஒன்று முதல் நான்கு வரை உள்ள எந்திரங்கள் இந்தியாவில் தயாரித்த எந்திரங்கள், ஐந்து மற்றும் ஆறாவதாக இடம்பெற்றுள்ள எந்திரங்கள் மட்டுமே வெளிநாட்டிலிருந்து தயாரிக்கப்பட்ட எந்திரங்கள் என்று சொன்னால் சரியல்ல, அனைத்து ஒன்று முதல் ஆறு வரிசை எந்திரங்களும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எந்திரங்கள்தான்.

இரண்டாம் பிரதிவாதி அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்று தனது ஓய்வூதிய தொகையினை கையில் வைத்திருந்ததை உங்களிடம் தெரிவித்து அவருக்கு மில் வைக்கலாம் என்று நீங்கள் தான் ஆலோசனை வழங்கினீர்கள் என்று சொன்னால் இல்லை.

வெளிநாட்டில் இருந்து எந்திரங்கள் இறக்குமதி செய்ய வேண்டும் என்றும், இதர தொகைகள் உங்களிடம் தொகையாக தான் வேண்டும் என்றும் நீங்கள் கேட்டுக் கொண்டதற்காகதான் பிரதிவாதி உங்களிடம் பாக்கி தொகை முழுவதையும் பணமாக செலுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

உங்களிடம் பிரதிவாதி அனைத்து தொகையும் கொடுத்து அதன் பிறகு தான் அவருக்கு நீங்கள் எந்திரங்கள் வழங்கியுள்ளீர்கள், எனவே

பிரதிவாதி உங்களுக்கு எந்த தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

2020 ஆம் ஆண்டே உங்களுக்கும் பிரதிவாதிக்குமான வரவு செலவுகள் அனைத்தும் நிறைவுற்றுவிட்டது, தற்போது வழக்குக்காக நீங்கள் காலாவதியான பின்பு புதிதாக 17.04.2021 தேதியிட்ட ஒரு இன்வாய்ஸ் தயாரித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.